**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

*****************

**ஊடக அறிக்கை**

**2021 மார்ச் முதலாம் திகதி முதல்**

**இந்தியாவில் இரண்டாம் கட்ட தடுப்பூசி**

2021 மார்ச் முதலாம் திகதியிலிருந்து வயதினை முன்னுரிமை அடிப்படையாக கொண்டு இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் இந்தியாவில் ஆரம்பமாகியுள்ளன . சுகாதார பராமரிப்பு ஊழியர்கள் மற்றும் முன்னரங்க பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டதை தொடர்ந்து 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் அதேபோல 45 முதல் 59 வயது வரையானவர்களில் வேறு நோய்களைக்கொண்டிருப்பவர்களுக்கும் இந்த இரண்டாம் கட்ட நடவடிக்கைகளில் முன்னுரிமை வழங்கப்படும் . முதலாவது கட்டத்தில் 15 மில்லியன் பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டிருந்த நிலையில் அடுத்த கட்டத்தில் கிட்டத்தட்ட நூறு மில்லியன் பேருக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

02. இரண்டாம் கட்ட பணிகளின் ஆரம்ப நாளில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட சுதேச கொ வக்சின் தடுப்பூசியினை முதன்முதலில் பெற்றுக்கொண்டிருந்தார். இந்தியாவின் சேரம் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் அட்ரா செனிக்கா கொவிட் தடுப்பூசியினை தொடர்ந்து தயாரிக்கப்பட்ட கொவக்சின் தடுப்பூசியினை இந்தியாவில் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் முதலாவது தடுப்பூசியினை பெற்றுக்கொண்ட பிரதமர் அவர்கள் கொவிட்-19 க்கு எதிரான உலகளாவிய யுத்தத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கு துரிதமாக செயற்பட்ட மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகளை பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

03. இப்பெருநோய்க்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தியா முன்ன ரங்கத்திலிருந்து செயல்பட்டு வருகின்றது. தொலைதூர நாடுகளுக்கு பல மில்லியன் கணக்கான தடுப்பூசிகளை விநியோகித்ததன்மூலம் இந்தியா தனது தடுப்பூசி உற்பத்தி ஆளுமையினை உலக நலனுக்காக பயன்படுத்தி வருகின்றது. இலங்கை உட்பட தனது நட்பு நாடுகள் மற்றும் அயல்நாடுகளுக்கு

இந்தியா நன்கொடை அடிப்படையில் தடுப்பூசிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதுவரையில் இ லங்கைக்கு இந்தியா ஒரு மில்லியன் தடுப்பூசிகளை வழங்கியுள்ளதுடன் இதில் 50 வீதமானவை இந்தியாவினால் நன்கொடை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து தொடர்ந்தும் கொவிட் தடுப்பூசிகளை வழங்குவதற்கான திட்டங்கள் காணப்படுகின்றன.

04. இந்தியாவில் இரண்டாம் கட்ட தடுப்பூசி பணிகள் ஆரம்பித்துள்ளமைக்கு சமாந்தரமாக நாரஹேன்பிட்டவில் உள்ள இராணுவ மருத்துவமனையில் உயர் ஸ்தானிகர் அவர்கள் தடுப்பூசியினை பெற்றுக்கொண்டிருந் தார். இலங்கை அரசாங்கத்தின் தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமாக இலங்கையில் பணியாற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன் இலங்கையிலுள்ள பல்வேறு இராஜதந்திர அலுவலகங்களும் அகர வரிசைப்படி இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு வருகின்றன .

**************

கொழும்பு

03 மார்ச் 2021